Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 28 (11-03-1992) புதன்கிழமை ஓசை: 22

## தீவகத்திற்கு கடிதம்; புதிய நடைமுறை

தீவகத்தில் தங்கியுள்ளவர்களுக்கான கடிதப்பரிமாற்றத்திற்கு புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஊர்காவற்துறை, நயினாதீவு, காரைநகர், எழுவைதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, ஆகியபிரதேசங்களில் தங்கியுள்ளவர்களுக்கு கடிதம் அனுப்ப விரும்புபவர்கள் தமது கடிதங்களை அண்மையில் உள்ள அஞ்சற்பெட்டிகளில் சேர்த்தால்போதுமானது. இவை தபால் அலுவலகத்தினால் சேகரிக்கப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் (6ஆம் பக்கம் பார்க்க)

# கிறிஸ்தவ நல்லெண்ண தூதுக்குழு இன்று யாழ்ப்பாணம் வருகிறது

## புலிகளுடன் 15இல் பேசுவர்

(யாழ்ப்பாணம்)

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வொன்றை காணும் நல்லெண்ண முயற்சியை மேற்கொண்டு கிறிஸ்தவ தூதுக்குழு வொன்று இன்று யாழ்ப்பாணம வரவுள்ளது. வெவ்வேறு கிறிஸ்தவ அமைப்புக்களைச் சேர்ந்த நால்வர் அங்கம் வகிக்கும் இக்குழுவினர், எதிர்வரும் 15ஆம் திகதி காலை விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவார்கள் எனத் தெரியவருகிறது.

இன்று யாழ்ப்பாணம் வரும் இந்த கிறிஸ்தவ தூதுக்குழுவில் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த வண. டாக்டர் பேல்கஸ்பஸ், மெதடிஸ் திருச்சபையைச் சேர்ந்த அதன் உபதலைவர் திருமதி இவான், அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த வண. டாக்டர் றியான்சி பெரேரா, வண. டுலிப் சிக்கோறா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த நல்லெண்ணத் தூதுக்குழுவினர் எதிர்வரும் 16 ஆம் திகதி வரையும், யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பர் அவ்வேளையில் யாழ்ப்பாணத்தில் உள்ள பல தரப்பட்ட மக்களுடனும் அவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவர்.

பதினைந்தாம் திகதி காலை இத்தூதுக்குழுவினர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்கள். இப் பேச்சுக்களின் போது புலிகள் தரப்பில் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, செயலாளர் யோகரெட்ணம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொள்வார்கள் எனத் தெரியவருகிறது.

## புத்தூரில் அகதி முகாம்கள் தீக்கிரை வயோதிபமாது கருகிமரணம்

[நமது நிருபர்]

இலங்கை செஞ்சிலுவைச் சங்க புத்தூர் அகதி முகாம் முற்றாக எரிந்து சம்பரானது. வயோதிபமாது பலியானார், மூவர் எரிகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை ஐந்து மணியளவில் மணற்பகுதி என்ற இடத்தில் தீவகப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கென கடந்த மாதம் அமைக்கப்பட்ட முப்பத்தாறு குடிசைகளே சேற்று எரிந்து சாம்பராகின.

அங்கு குடிசையொன்றின் அடுப்பில் இருந்த நெருப்புப் பற்றியதாலேயே இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. இக்குடிசைகளில் வசித்துவந்த இருநூறுக்கும் மேற்பட்டோர் சகல உடைமைகளையும் இழந்து நிர்க்கதியான நிலையில் உள்ளனர்.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் தங்கியிருந்த ( 6ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் சூட்டிற்கு 3 அப்பாவித் தமிழர் பலி

திருக்கோணமலை மாவட்டம் மல்லிகைத்தீவில் பதுங்கியிருந்த இராணுவம் சுட்டதில் மூன்று அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர் இந்த பரிதாப சம்பவம் சென்ற சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த சம்பவத்தில் காளியப்பு செந்தரராஜா (மல்லிகைதீவு) (வயது 35), பேரின்பராஜா ரவி (வயது 25), சுட்டியான் (வயது 22) ஆகியோரே இராணுவத்தினால் சுட்டுக்கொல்லப் பட்டவர்கள் ஆவர். இவர்களின் உடல்களையும் இராணுவத்தினர் பச்சைனூல் இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றனர்.

இதேவேளை சண்முகம் தங்கேஸ்வரன் (சம்பூர் வயது 22) என்பவரை சம்பூரில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

## க. பொ. த. (உ/த) பரீட்சை

## ஏப்ரலில் நடத்த கோரி பல்கலை. மாணவர் பேரணி

தடைப்பட்ட 1991 ஆகஸ்ட் உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி ஏப்ரல் 2 இல் நடைபெறும் என்பதை உத்தியோக பூர்வமாக உடனடியாக அறிவிக்கும்படிகோரி ஆர்ப்பாட்ட சைக்கிள் பேரணியும் பொதுக் கூட்டமும் நடாத்துவது என பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

பொதுக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து சைக்கிள் ஊர்வலமும் நடைபெறும்.

மேற்படி கோரிக்கை அடங்கிய மகஜரொன்று அரச அதிபரிடம் கையளிக்கப்படும்.

அனைத்து பாடசாலை மாணவர்களையும் கலந்து கொள்ளும்படி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## இவ்வருட முத்தமிழ் விழா சிறப்புற நடத்த ஏற்பாடு

[நமது நிருபர்]

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் சென்ற வருடம் யூன் மாதத்தில் நடாத்தியது போன்று இவ்வருடமும் மிகவும் கோலாகலமாகத் தமிழீழ மண்ணில் முத்தமிழ் விழவினை நடத்துவதற்குரிய ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் அறிவித்துள்ளது.

சென்ற வாரம் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள கேட்போர் கூட்டத்தில் இதற்கான ஆரம்பக் கூட்டம் இடம்பெற்ற போது விழாவைச் சென்றவருடத்தைவிட மிகவும் சிறப்பாகவும், எழுச்சியாகவும் கொண்டாடுவதன் பொருட்டு விழாக் (6 ஆம் பக்கம் பார்க்க)

## நகை கொள்வனவில் நிபந்தனை தளர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நகைக்கடை உரிமையாளர்கள் தாம் வாங்கும் நகைகளை பதினைந்து நாட்களுக்கு உருக்குலையாமல் தம்வசம் வைத்திருந்தால் போதுமானது என தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் அறிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் இருபத்திரெண்டாம் திகதி பிரசுரிக்கப்பட்ட காவல்துறையினரின் பிரசுரத்திற்கமைய நகைக் கடை உரிமையாளர்களும் நகைசார்ந்த தொழில் புரிவோரும் தாங்கள் வாங்கும் நகைகளை முப்பது நாட்களுக்கு உருக்குலையாமல் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். ஆனால் தற்போது இந்நிபந்தனை பதினைந்து நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஆயினும் இது தொடர்பான ஏனைய நிபந்தனைகளில் எது (6 ஆம் பக்கம் பார்க்க)

## சைக்கிள் திருத்துவோர் பெயர்களை பதிவு செய்க

### --காவல்துறை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள சகல சைக்கிள் திருத்தும்கடை உரிமையாளர்களும் தமது பெயர் விபரங்களை அருகிலுள்ள காவல் துறை பணிமனையில் பதிவுசெய்து கொள்ளுமாறு தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் நடேசன் அறிவித்துள்ளார்.

நாட்டில் நடைபெறும் சைக்கிள் திருட்டுக்களை இலகுவாக கண்டுபிடிப்பதற்காகவே (6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் திடீர்த் தாக்குதல் பூநகரியில் ஒருபடை பலி

### ஆயுதம், வெடிபொருள் மீட்பு

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி மட்டுவில்நாடு மேற்குப் பகுதியில் இருக்கும் சிறிலங்கா இராணுவ காவலரண்களுக்கு அண்மையில் விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை 5.30 மணியளவில் திடீர்த் தாக்குதலை நடாத்தினர்.

இந்த காவலரணிலிருந்து 300 யார் தூரத்தில் அமைந்துள்ள உதவி அரசாங்க அதிபர் கட்டடத்திலிருந்த இராணுவத்தினர்மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலுக்கு ஒரு இராணுவச் சிப்பாய் பலியானார். ஏனையோர் தப்பி முகாம்களுக்குள் ஓடிவிட்டனர்.

இறந்த சிப்பாயின் சடலமும் ஒரு நவீனரக துப்பாக்கியும், வெடி பொருள்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன, இத்தாக்குதலில்

★ ரி - 56 துப்பாக்கி - 01
★ அதற்குரிய ரவைக் கூடுகள் - 04
★ நடுத்தர ரவைகள் - 110

என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

வெளிவந்து விட்டது

ஈழநாதம் வெளியீடான

**காலமும் கோலமும்**

ஓவியர் தயாவின் கருத்தோவியங்கள்

கிடைக்குமிடம்:-

பூபாலசிங்கம் புத்தகசாலை

யாழ்ப்பாணம்

# வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் செயலகம்

## கிராம உத்தியோகத்தர் சேவையின் 11 ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை -- 1992

கிராம உத்தியோகத்தர் சேவையில் 11 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகளுக்கு இணங்க, வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்களை நியமிக்கும் பொருட்டுப் பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றும் பொருட்டு, வடக்கு - கிழக்கு மாகாண பிரதமசெயலாளரினால் கீழ்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன.

02. பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையில் தகைமைகளைப் பெறும் விண்ணப்பதாரர்களுக்கிடையில் திறமை அடிப்படையில் தகைமைகளை உடையவர்களை இன விகிதாசாரத்துக்கு இணங்கத் தேர்ந்தெடுத்து, அத்தகைய வெற்றிடங்கள் நிரப்பப்படும். வெற்றிடமொன்றின் பொருட்டு சம தகைமைகளைக் கொண்ட இரண்டு விண்ணப்பதாரர்கள் அல்லது அதற்கு மேலதிகமானோர் இருக்கும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பான இறுதித் தீர்மானத்தை வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எடுப்பார்.

கிராம உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான பரீட்சை மூன்று (3) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். அவை கீழ்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும்.

| | வினாத்தாள் | நேரம் |
|---|---|---|
| 1. | மொழி ஆற்றல் | 1 மணி |
| 2. | பொது அறிவு | 1 மணி |
| 3. | விவசாய அறிவு (பாடத்துடன் தொடர்புடையது) | 1 மணி |

### பாடத்திட்டம்:

(அ) மொழி ஆற்றல் - பிழையற்ற முறையில் மொழியைக் கையாளும் திறமை. கருத்துக்களை வெளியிடுதல், அவற்றைப் புரிந்து கொள்ளுதல். இத்துறையில் கடிதங்களைப் பரிமாறிக் கொள்ளும் திறமை. முறைப்பாடுகளை அறிக்கைப் படுத்தல் போன்ற விடயங்களை அடக்கிய 01 மணித்தியால வினாத்தாள்.

### பொது அறிவு:

(ஆ) தேசிய சர்வதேச விடயங்கள் தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிவையும், தேசிய, பொருளாதார, சமூக, வரலாற்று ரீதியிலான கலாசாரங்கள் தொடர்பான அறிவை அளிக்கும் பொருட்டான 01 மணித்தியால வினாத்தாள்.

### விவசாய அறிவு:

(இ) 1 - விவசாய கோட்பாடுகளும் - பயிர்ச்செய்கையும்.

11 - ★ நெற் பயிர்ச்செய்கை - விதைகளை இனங்காணுதல், ஏற்படும் நோய்கள், நோய்களைத் தடுப்பதற்கான முறைகள். புதிய தொழில்நுட்ப பயிர்ச்செய்கை முறைகள்,

★ மாட்டுப் பண்ணைகள் பால் எடுக்கும் பொருட்டு - பசுக்களை இனங்காணுதல், நோய்களைத் தடுக்கும்முறைகள். பால், இறைச்சி உற்பத்திகளைச் சந்தைப்படுத்துதல்

★ கோழி வளர்ப்பு - கோழி வளர்ப்புக்கு தேவைப்படும் தொழில்நுட்ப அறிவு, உணவுகளைத்தயார்செய்தல். நோய்கள். நோய்களைத் தடுத்தல்.

★ தேனீக்கள் வளர்ப்பு - தேனீப் பெட்டிகளை தயார் செய்தல். புதிய தொழில் நுட்பஅறிவு.

★ வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கை - தகுந்த வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கைகளை இனங்காணுதல் - நீர் வழங்குதல்.

111. பயிர்களைப் பல்வகைப் படுத்தல் தொடர்பாக அடிப்படை அறிவுடன் தொடர்புடைய விடயங்கள்.

1v. மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பாக ஆரம்ப செய்முறைஅறிவு - மீன்களின் இனப்பெருக்கம், மீன் பிடித்தல், மீன் உற்பத்திகளைச் சந்தைப் படுத்தல், களஞ்சியப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பான தொழில்நுட்ப அறிவு.

★ விவசாயத்தின் பொருட்டு உபயோகித்துக் கொள்ளக்கூடிய தாபன முறைகள் தொடர்பாகப் பயிலுதல்

★ உதவி மானியங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை.

பரீட்சை:- மாவட்டத் தலைநகரங்களில் உள்ள நிலையத்தில் மாத்திரமே நடாத்தப்படும்.

03. விண்ணப்பிக்கும் பொருட்டு அபேட்சகர்கள் கீழ்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. வயதெல்லை

விண்ணப்பதாரர்கள், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாதவர்களாகவும், 40 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க நிரந்தர பதவிகளை வகிப்பவர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.

11. (அ) கல்வித் தகைமைகளும் மற்றைய தகைமைகளும்

1. சிங்களம், தமிழ் மொழிகள் உட்பட எண்கணிதம், வர்த்தக எண்கணிதம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியுடன் குறைந்த பட்சம் இரண்டு திறமைச்-சித்திகளுடன் 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைதல்.

அல்லது

2. சிங்களம் அல்லது தமிழ் மொழி, எண்கணிதம், வர்த்தக எண்கணிதம், ஆரம்ப கணிதம், தூயகணிதம் என்னும் பாடங்களில் சித்திகளுடன் குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதரப்) பரீட்சையில் சித்தியடைதல்.

அல்லது

3. மொழி, கணிதம் உட்பட குறைந்த பட்சம் 'பி, தரத்தில் இரண்டு சித்திகளுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் தேசிய கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தியடைதல்.

குறிப்பு, மேல் பந்தி 3 இன் கீழ் க. பொ.த (சா. த) ஏதேனும் பாடமொன்றின் பொருட்டு சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருக்கையில் க. பொ. த (உ. தரத்தில்) அப்பாடங்களின் பொருட்டு சாதாரண சித்தி பெற்றிருந்தால் அத்தகைய பாடங்கள் சாதாரண தரத்தில் திறமைச் சித்திகளாகக் கருதப்படும்.

(ஆ) விண்ணப்பதாரர்கள்:

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. நல்லொழுக்கம் உடையவர்களாக இருத்தல்வேண்டும்.
3. கிராம உத்தியோகத்தரொருவருக்கான கடமைகளை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் சிறந்த உடல் நலம் கொண்டவராக விளங்குதல் வேண்டும்.

(இ) 1. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்புள்ள நெருங்கிய 6 ஆண்டுகளுக்குள் அபேட்சகர் தாம் நியமனம் கோரும் பி/செ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தொடர்ந்து 3 ஆண்டுகள் வசித்து வந்தார் என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு கீழ் வரும் சான்றிதழ்களை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைத்தல் வேண்டும்.

★ வாக்காளர் பெயர்ப்பட்டியலில் இருந்து பெற்றுக் கொண்ட பொழிப்பு.

★ பி / செயலாளரினால் உறுதி செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் சான்றிதழொன்று.

2. அபேட்சகர் வெற்றிடமுள்ள நிர்வாக மாவட்டத்தினுள் பிறந்தவராக அல்லது நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருக்கும் பட்சத்தில், பெற்றோர்கள் காலத்துக்குக் காலம் இடமாற்றம் பெற்றுச் செல்வதனால் தமது வதிவிடம் தொடர்பாக தகவல்களை உறுதிப்படுத்தமுடியாத இடமாற்றங்களைக் கொண்ட சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் அபேட்சகர்களாகத் தோற்றும் போது, அப்பிள்ளைகளின் நிரந்தர வதிவிடமாக தாயின் அல்லது தந்தையின் பிறந்த இடத்தை நிரந்தர வதிவிடமாகக் கருதுதல் வேண்டும்.

04. ஆட்சேர்ப்புக்கள் கிராம உத்தியோகத்தர் சேவையின் 11 ஆம் தரத்திற்கே மேற்கொள்ளப்படும்.

1. இக்கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களுக்கு உப அட்டவணையின் இல. 1 இல் காட்டப்பட்டுள்ள வெற்றிடங்களைக் கொண்டுள்ள பி. செ/ உ.அ. அதிபர் பிரிவுகளில் வசிப்பவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

11. கிராம உத்தியோகத்தர்களாகத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கிணங்க, குறிப்பிட்ட பி. செ / உ. அ அதிபர் பிரிவுகளில் வதியும் உச்சப் புள்ளிகளைப் பெற்றுள்ள குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டவர்களே தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கும் பொருட்டு, தகைமையைப் பெறுவதற்கு குறிப்பிட்ட பாடங்களில் 40 புள்ளிகள் வீதம் பெறுதல் வேண்டும்.

### 05 விண்ணப்பங்கள் அனுப்பும் முறை:

இந்த விண்ணப்பத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கிணங்கத் தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்களை 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபாலில் கீழ்வரும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபரின் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை அச்சிட்டு அல்லது தட்டெழுத்து இயந்திரத்தில் பொறித்து அல்லது கையால் எழுதித் தயார் செய்து முடிந்த போதிலும் அதனைத் தமது கையெழுத்தின் மூலமே பூரணப்படுத்துதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் இடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கிராம உத்தியோகத்தர் சேவை 11 ஆவது தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 1992'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

முகவரி:-
1. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
2. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.
3. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர் மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு.
4. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், வவுனியா.
5. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம் மன்னார்.
6. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், திருக்கோணமலை.
7. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு.
8. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், அம்பாறை.

விண்ணப்பங்களுடன் காசுக் கட்டளைகள் தவிர்ந்த, எந்தவொரு ஆவணங்களையும் அனுப்புதல் கூடாது என்பதுடன், நேர்முகப் பரீட்சையின் போது முன்னளிப்பதற்கு கீழ்வரும் சான்றிதழ்களைத் தயார் படுத்திக் கொள்ளல் வேண்டும்.

( 3ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு மாகாண

1. வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.
2. பிறப்பத்தாட்சிப் பத்திரத்தின் புகைப்படப் பிரதி.
3. கல்விச் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதி.
4. அண்மையில் பெற்றுள்ள குணநலச் சான்றிதழ்கள் இரண்டு.

### 06 பரீட்சைக் கட்டணங்கள்

தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடிய விதத்தில் வடக்கு - கிழக்கு மாகாணசபைப் பிரதம செயலாளரின் பதவிப் பெயருக்குப் பெற்றுக் கொண்ட காசுக்கட்டளையை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். அதை விண்ணபத்துடன் ஒட்டுதல் கூடாது. ரூபா 75/- க்கான காசுக்கட்டளையை அனுப்புதல் வேண்டும்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மறுபடி செலுத்தப்படாது என்பதுடன், வேறு பரீட்சைகளுக்கு மாற்றவும் இயலாது.

07 விண்ணப்பங்களைப் பிழையான முறையில், பூரணமற்ற முறையில் தயார் செய்து அனுப்புவதால் ஏற்படும் பாதகமான விளைவுகளுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாவார்கள். பூரணமற்ற, முறையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழ் வரும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஆட்பதிவுஅடையாள அட்டை.
2. தபால் அதிபரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை.
3 செல்லுபடியான கடவுச் சீட்டு.

எல்லாப் பரீட்சார்த்திகளும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பரீட்சைச் சட்டதிட்டங்களைத் தெரிந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவற்றைப் பின்பற்றுதலும் வேண்டும்.

கிராம உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு, கிடைத்துள்ள விண்ணப்பங்கள் எழுத்து மூலப் பரீட்சைக்கு முன்போ அல்லது பின்போ நிராகரிக்கும் அதிகாரம் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளருக்கு உரித்தாகும்.

விண்ணப்பதாரர்கள் கையொப்பத்தை பாடசாலை அதிபர், சட்டத்தரணி, சமாதான நீதிவான், பிரசித்த நொத்தாரிசு படைத்தளபதி சேவைகளின் ஆணைபெற்ற உத்தியோகத்தர்கள் பெயரில் பிரிவில் அரசாங்க வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட அதிகாரி அல்லது ஆண்டொன்றுக்கு 25,200/- க்குக் குறையாத இணைந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்க சேவை நிரந்தர பதவியொன்றை வகிப்பவரால் உறுதி செய்ய முடியும்.

### 08 பதவிக்கான சம்பள அளவுத்திட்டம்:

வருடாந்தம் 19, 680 - 9X480 -8X600 -28,800/- ஆகும். ரூபா. 25, 200/- க்கு முன்னர் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை உண்டு. பயிற்சிக் காலத்தில் மாதம் 250/- க்கான கொடுப்பனவொன்று செலுத்தப்படும்.

### 09 சேவை நிபந்தனைகள்:

பதவி நிரந்தரமானது, ஓய்வூதியமுடையது. விதவை, அனாதைச் சிறார்கள் நிதியத்துக்கு உதவித் தொகைகள் செலுத்தப்படல் வேண்டும். 03 மாதப் பயிற்சிக் காலத்தைக் கொண்டிருக்கும்.

சொ. கணேசநாதன்,
பிரதம செயலாளர்,
வடக்கு-கிழக்கு மாகாணசபை,
பிரதம செயலாளரின் செயலகம்,
திருக்கோணமலை.

திகதி:- 1992.02 24
திருக்கோணமலை.

## அட்டவணை இல. 01

### வெற்றிடமாகவுள்ள பகுதிச் செயலாளர்/மேலதிக அரசாங்க அதிபர் பிரிவுகளின் பெயர்ப்பட்டியல் மாவட்ட இலக்கத்துடனும் பிரிவு இலக்கத்துடனும்

| மாவட்டம் | மாவட்ட இல. | பிரிவு இல. |
|---|---|---|
| கொழும்பு | 01 | 01 - 30 |
| கம்பஹ | 02 | 31 - 60 |
| களுத்துறை | 03 | 61 - 90 |
| காலி | 04 | 91 - 120 |
| மாத்தறை | 05 | 121 - 150 |
| உறம்பாந்தோட்டை | 06 | 151 - 180 |
| மொனறாகலை | 07 | 181 - 210 |
| பதுளை | 08 | 211 - 240 |
| கேகாலை | 09 | 241 - 270 |
| இரத்தினபுர | 10 | 271 - 300 |
| மாத்தளை | 11 | 301 - 330 |
| கண்டி | 12 | 331 - 360 |
| நுவரெலியா | 13 | 361 - 390 |
| அநுராதபுர | 14 | 391 - 420 |
| பொலனறுவை | 15 | 421 - 450 |
| குருநாகல | 16 | 451 - 480 |
| புத்தளம் | 17 | 481 - 510 |
| அம்பாறை | 18 | 511 - 540 |
| மட்டக்களப்பு | 19 | 541 - 570 |
| முல்லைத்தீவு | 20 | 571 - 600 |
| மன்னார் | 21 | 601 - 630 |
| யாழ்ப்பாணம் | 22 | 631 - 660 |
| திருக்கோணமலை | 23 | 661 - 690 |
| கிளிநொச்சி | 24 | 691 - 720 |
| வவுனியா | 25 | 721 - 750 |

## அட்டவணை இல. 01

### கிராம உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக உள்ள பிரதேசச் செயலாளர் /உ.அ.அதிபர் பிரிவுகளின் பெயர்ப்பட்டியல் மாவட்ட இலக்கத்துடனும், பிரதேச இலக்கத்துடனும்

#### அம்பாறை மாவட்டம் - இல.18

| பிரதேசச் செயலாளர்/உ.அ.அ.பிரிவு பெயரும் | இலக்கமும் |
|---|---|
| அட்டாளைச் சேனை | - 511 |
| ஆலையடி வேம்பு | - 512 |
| அக்கரைப்பற்று | - 513 |
| அம்பாறை | - 514 |
| தமணை | - 515 |
| கல்முனை (முஸ்லிம்) | - 517 |
| கல்முனை (தமிழ்) | - 518 |
| காரைதீவு | - 519 |
| லகுகல | - 520 |
| நிந்தவூர் | - 522 |
| பொத்துவில் | - 524 |
| திருக்கோவில் | - 526 |
| உகணை | - 527 |

#### மட்டக்களப்பு மாவட்டம்-இல.19

| பிரதேசச் செயலாளர்/உ.அ.அ.பிரிவு - பெயரும் | இலக்கமும் |
|---|---|
| ஏறாவூர்பற்று | - 541 |
| காத்தான்குடி | - 542 |
| கோறளைப்பற்று | - 543 |
| கோறளைப்பற்று - வடக்கு | - 544 |
| மண்முனை | - 545 |
| மண்முனை வடக்கு | - 546 |
| மண்முனை தென் எருவில்பற்று | - 547 |
| மண்முனை தென் மேற்கு | - 548 |
| மண்முனை மேற்கு | - 549 |
| போரதீவுப்பற்று | - 550 |

#### முல்லைத் தீவு மாவட்டம்-இல. 20.

| பிரதேசச் செயலாளர் உ.அ.அ.பிரிவு-பெயரும் | இலக்கமும். |
|---|---|
| மாந்தை கிழக்கு (பாண்டியன் குளம்) | - 571 |
| கரைதுறைப்பற்று (முல்லைத்தீவு) | - 572 |
| ஒட்டிசுட்டான் | - 573 |
| புதுக்குடியிருப்பு | - 574 |
| துணுக்காய் | - 575 |

#### மன்னார் மாவட்டம் - இல. 21.

| பிரதேசச் செயலாளர்/உ.அ.அ.பிரிவு-பெயரும் | இலக்கமும். |
|---|---|
| மடு | - 601 |
| மன்னார் | - 602 |
| மாந்தை மேற்கு | - 603 |
| முசலி | - 604 |
| நானாட்டான் | - 605 |

#### யாழ்ப்பாண மாவட்டம்-இல. 22.

| பிரதேசச் செயலாளர்/உ.அ.அ.பிரிவு-பெயரும் | இலக்கமும் |
|---|---|
| நெடுந்தீவு | - 631 |
| தீவுப்பற்று வடக்கு | - 632 |
| தீவுப்பற்று தெற்கு | - 633 |
| யாழ்ப்பாணம் | - 634 |
| நல்லூர் | - 635 |
| தென்மராட்சி | - 636 |
| வடமராட்சி கிழக்கு | - 637 |
| வடமராட்சி வடக்கு | - 638 |
| வடமராட்சி தெற்கு - மேற்கு | - 639 |
| வலிகாமம் கிழக்கு | - 640 |
| வலிகாமம் வடக்கு | - 641 |
| வலிகாமம் தெற்கு | - 642 |
| வலிகாமம் தென்மேற்கு | - 643 |
| வலிகாமம் மேற்கு | - 644 |

#### திருக்கோணமலை மாவட்டம் - இல. 23.

| பிரதேசச் செயலாளர்/உ.அ.அ.பிரிவு-பெயரும் | இலக்கமும் |
|---|---|
| ஈச்சிலம்பத்தை (வெருகல்) | - 661 |
| கோமரங்கடவல | - 662 |
| கந்தளாய் | - 663 |
| கிண்ணியா | - 664 |
| குச்சவெளி | - 665 |
| மொறவேவா | - 666 |
| மூதூர் | - 667 |
| பதவிசிறிபுர | - 668 |
| சேருவில | - 669 |
| தம்பலகாமம் | - 670 |
| திருகோணமலை பட்டினமும் சூழலும் | - 671 |

#### கிளிநொச்சி மாவட்டம்-இல. 24.

| பிரதேசச் செயலாளர்/உ.அ.அ. பிரிவு-பெயரும் | இலக்கமும் |
|---|---|
| கரைச்சி | - 691 |
| கண்டாவளை | - 692 |
| பளை | - 693 |
| பூநகரி | - 694 |

#### வவுனியா மாவட்டம் இல. 25.

| பிரதேசச் செயலாளர்/உ.அ.அ பிரிவு-பெயரும் | இலக்கமும் |
|---|---|
| வவுனியா வடக்கு | - 721 |
| வவுனியா தெற்கு சிங்களப்பிரிவு | - 722 |
| வவுனியா தெற்கு தமிழ்ப்பிரிவு | - 723 |
| வெங்கலச் செட்டிக்குளம் | - 724 |

#### விசேட குறிப்பு

யாழ்ப்பாண மாவட்ட ஆணையாளர்/ அரசாங்க அதிபரினால் கடந்த ஆண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது விண்ணப்பங்கள் விண்ணப்தாரர்களும் தற்சமயம் ஆட்சேர்ப்பு நிபந்தனைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாலும், விண்ணப்பமாதிரி படிவத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாலும் புதிய நிபந்தனைகளுக்கமைய, குறிப்பிட்ட திகதிக்குள் மீண்டும் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள். விண்ணப்பக் கட்டணம் புதிதாகச் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் முன்னர் பணம் செலுத்திய விபரம், விண்ணப்பம் அனுப்பிய பதிவுத் தபால், பற்றுச்சீட்டு விபரம்என்பனகுறிப்பிடப்படல்வேண்டும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிடம்

நிதர்சனம் நிறுவனத்தில் அறிவிப்பாளர் பணிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரரர் அறிவிப்புத் துறையில் திறமை வாய்ந்தவராக இருத்தல் வேண்டும். 1992.03.13(வெள்ளி)காலை10 மணிக்கு நிதர்சனம் செயலகத்தில் நேரில் சமுகம் அளிக்கவும்.

நிதர்சனம்,
தீப் வீதி,
திருநெல்வேலி. [சி/4033]

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை தலைமை அலுவலகம்

## தையல் பயிற்சி ஆசிரியர்

பளை, மருதங்கேணி, ஊர்காவற்துறை, வேலணை நெடுந்தீவு, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் தகைமையும் அனுபவமும் உள்ளோரிடமிருந்து 17-03-92 வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். 18-03-92 (பிற்பகல் 2.00 மணிக்கு) எமது பணிமனையில் நேர்முகப் பரீட்சைக்கும் செய்முறைப் பரீட்சைக்கும் சமுகம் தரவும்.

73, கண்டிவீதி, கௌரவ செயலாளர்
யாழ்ப்பாணம்,
10-03-92. (4038)

## அறிவித்தல்

அன்னை பூபதி ஞாபகார்த்த பொது அறிவுப் போட்டியில் மாணவர்கள் கலந்து கொள்ளும் பொருட்டு எதிர்வரும் 14,15 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) அனைத்து கல்வி நிறுவனங்களையும் மூடி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பொதுச் செயலாளர்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்
(2283)

## வரி விளம்பரம்

கல்வி

ENGLISH GRAMMAR SPOKEN ENGLISH 3 மாத ஆங்கிலப் பயிற்சி 14-3-92 சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகிறது. V. N. Kandasamy A. I. B. Part I (Landon) Inter (London) 87, திருநெல்வேலி றோட், கொக்குவில்
(2282)

## 5-வதுதொகுதி அகதிகள் வந்தனர்

(சென்னை)

இலங்கை தமிழ் அகதிகளின் ஐந்தாவது தொகுதியினர் இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னார் வந்துசேர்ந்தனர்.

இதில் 142குடும்பங்களைச் சேர்ந்த514பேர் இத்தொகுதியில் உள்ளனர் இதுவரை 2592தமிழ் அகதிகள் தமிழகத்திலிருந்து திருப்பிஅனுப்பப் பட்டுள்ளனர்.

## மீனவர் மீது துப்பாக்கிச் சூடு

[குருநகர்]

நேற்று முன்தினம் (9.3.92) காலை 6.30 மணியளவில் பூநகரி - பூவரசந் தீவுப் பகுதியில் இருந்துசிறிலங்காஇராணுவம் கடற்றொழிலாளர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

அரியாலைகிழக்கு, பூம்புகார் பகுதிக்கடலில் தொழிலிலீடுபட்டிருந்த மீனவர்களை இலக்கு வைத்து நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் எவரும் பாதிக்கப்படவில்லை என்றும் அறிவிக்கப் படுகிறது (21)

## கருத்தரங்கு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பணிமனையில் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு திரு. க. சொக்கலிங்கம் அவர்கள் ''எனது ஆசிரிய அதிபர் - எழுத்துலக அனுபவம்'' என்னும் பொருள் பற்றிக் கருத்துரை வழங்குகிறார்.

## நினைவு கூருகின்றோம்

## 1992-03-11

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் துணுக்காய்ப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது, தமது ஒரே கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய-

**றஞ்சன்** (சரவணமுத்து சத்தியசீலன்
2 ஆம் படிவம், வவுனிக்குளம்)

**ஜீவா** (கந்தையா கெங்காதரன் -
பெரியதம்பனை, செட்டிகுளம்)

இத்தினத்திலிருந்து, இரு தினங்கள் துணுக்காய், மல்லாவிப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது படுகொலை செய்யப்பட்ட 7 தமிழர்கள் மற்றும் தன்மானம் காத்துக் கொள்ளும் முன் எச்சரிகையாக தற்கொலை செய்து கொண்ட இளம்பெண்.

1987 ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் தேச விரோதிகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**திருமால்** (வெள்ளைக்குட்டிதுரையன் -
காரைதீவு, அம்பாறை.)

1988 ஆம் ஆண்டு உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**யோகேஸ்** (பிரான்சிஸ் மனோகரன்-
பெரியபுல்லுமலை, மட்டக்களப்பு)

திருக்கோணமலையிலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற பயணிகள் பேரூந்தை வழிமறித்த இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 15 தமிழர்கள்.

முத்தையன்கட்டில் இந்தியப்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்

1989 ஆம் ஆண்டு அம்பாறை காரைதீவுப் பகுதியில் தேசவிரோத சக்திகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ச் சிறுவன்

கலிகையில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு திருக்கோணமலை, கந்தளாய், அணைக்கட்டுப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய.

**வர்ணன்** (வேலாயுதம் ரதீஸ்குமார்-
கிளிவெட்டி, மூதூர். திருக்கோணமலை.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி/4036)

வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் செயலகம்
கிராம உத்தியோகத்தர் சேவையின் - 11 ஆம் தரத்திற்கு
ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கான

## போட்டிப் பரீட்சை - 1992

மாவட்டம்:- மாவட்ட இல:-
விண்ணப்பிக்கும் பிரதேசச் செயலாளர்/உ.அ பிரிவு இல:
அதிபர் பிரிவு:

01. விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடன் பெயர் ....................
ஆங்கிலத்தில் முழுப்பெயர்: ....................
ஆங்கிலத்தில்: ....................
சிங்களம்/தமிழ்: ....................

02. முகவரி:
ஆங்கிலத்தில்; ....................
சிங்களம்/தமிழ்: ....................

03. பால்:- ஆண் - 1 பெண் - 2

04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
சிங்களம் - S
தமிழ் - T
ஆங்கிலம் - E

(இதனைப் பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

05. நீங்கள் இலங்கை பிரஜையா என்பதை:-
பரம்பரையாக - 1
பதிவு செய்வதன் மூலம் - 2

06. இனம்:

| | | | |
|---|---|---|---|
| சிங்களம்: | - 1 | இலங்கைத் தமிழ் | - 2 |
| முஸ்லிம்: | - 3 | இந்தியத் தமிழ் | - 4 |
| மலாய் | - 5 | வேறு | - 6 |

07. பிறந்த திகதி:
வருடம்:.................... மாதம்.................... திகதி:....................

08. பிறந்த இடம்: மாவட்டம்: ....................
பிரதேசச் செயலாளர் பிரிவு: ....................
கிராம உத்தியோகத்தர் பிரிவு: ....................

09. விண்ணப்பிக்கும் பிரதேச செயலாளர் பிரிவில் வசித்த காலம்:
வருடம்:.................... மாதம்:.................... திகதி:....................

10. க. பொ. த. (சா/த/தே. பொ. க. சா. பரீட்சை அல்லது தகைமை பெறும் பரீட்சையின் விபரங்கள்.
பரீட்சையின் பெயர்: .................... வருடம்; ....................

பரீட்சை இல: ....................

| | பாடங்கள் | தரங்கள் | | பாடங்கள் | தரங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | .......... | .......... | 5. | .......... | .......... |
| 2. | .......... | .......... | 6. | .......... | .......... |
| 3. | .......... | .......... | 7. | .......... | .......... |
| 4. | .......... | .......... | 8. | .......... | .......... |

11. வேறு தகைமைகள்:

12. நீர் எப்போதாவது ஏதேனும் குற்றமொன்றிற்கு நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா?
ஆம்/இல்லை: (ஆம் எனின் விபரங்களைத் தருக)

13. விண்ணப்பதாரரின் சான்றிதழ்:

அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள், எனக்குத் தெரிந்த வரையில் உண்மையானவையென தெளிவாக கூறுகிறேன்.

ஆ) இவ்விண்ணப்பம் தவிர்ந்த வேறு விண்ணப்பம் ஏதேனும்இப்பரீட்சையின் பொருட்டு என்னால் முன்னளிக்கப்படவில்லையெனவும் நேர்மையாகக் கூறிக்கொள்கிறேன். என்னால் கூறப்பட்ட விபரங்கள் பொய்யானதும், பிழையானதும் என நான் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட முன்பு காணப்படுமிடத்து தகைமையற்றவனாவேன் எனவும் நியமனம் கிடைத்த பின்னர் கண்டுபிடிக்குமிடத்து சேவையிலிருந்து விலக்குவதற்கு உட்படுவேன் எனவும் அறிவேன்.

இ) பரீட்சைக் கட்டணம் ரூபா..................../-செலுத்தப்பட்டுள்ளது. காசுக்கட்டளை இலக்கம்: ....................
வழங்கிய தபால் அலுவலகம் ....................
திகதி: ....................

ஈ) நான் இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு உடன்படுகின்றேன்

....................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி: ....................

14. விண்ணப்பதாரர் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.
இவ்விண்ணப்பத்தை முன்னளித்த திரு/திருமதி: .................... என்பவர் எனக்கு நன்கு பரீட்சயமானவர் எனவும், அவர் 199 .......... ந் திகதி என் முன்னிலையில் தனது கையெழுத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

....................
திகதி: .................... உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்: ....................
பதவி: ....................
முகவரி: ....................
திகதி: ....................
குறிப்பு:-
பணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டை கழற்றியெடுக்கக்கூடிய விதத்தில் விண்ணப்பத்துடன் குண்டூசியொன்றினால் இணைக்கவும், (சி/4034)

### சிந்தனைக்கு

குற்ற உணர்வையும், தீய செயல்களையும்
அச்சம் சூழ்கின்றது. அறவழி நடக்கும்,
இதயம் அச்சத்தை அறியாது.

— வில்லியம் ஹாவார்ட்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 11-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05


## எதிரியால் கூட மறுக்க முடியவில்லை

"உலகில் மிகுந்த கட்டுப்பாடும் தேர்ச்சியும் மிக்க ஒரு கெரிலா இயக்கமாக நாம் புலிகளை மதிக்கின்றோம். அதன் தலைவர் பிரபாகரன் 1983 ஆம் ஆண்டிலிருந்து சிங்கள இராணுவத்திற்கு எதிரான சண்டையில் புலிகளுக்குத் தலைமை தாங்கி தனது ஆற்றலை நிரூபித்துள்ளார்" இவ்வாறு சிறிலங்கா கூட்டுப்படைகளின் நடவடிக்கைத் தலைமைத்தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாடு, செயற்பாடு என்பன பற்றியோ தலைவர் பிரபாகரனின் தனித்துவம் பற்றியோ பாராட்டு அங்கீகாரம் வழங்கும் முதலாவது நபர் அல்ல ஹமில்டன் வனசிங்கா. 1990 இல் உலகில் கட்டுப்பாடும், செயற்பாடும் மிக்க விடுதலை இயக்கங்களில் ஒன்று விடுதலைப்புலிகள் இயக்கமென்றும், அதன் தலைவர் பிரபாகரன் உலக முன்னணி கெரில்லாத் தலைவர்களில் முதன்மையானவர் எனவும் பி.பி.ஸி கணிப்பீடு செய்தது.

இதேவேளை கடந்த தசாப்தத்தின் 'நாயகனாக' தலைவர் பிரபாகரனைத் தேர்ந்தெடுத்தார் லங்கா கார்டியன் ஆசிரியர் மேவின் டி சில்வா. அவர் எண்பதுகளில் தமிழீழத்தினதும் சிங்களதேசத்தினதும் தலைவிதியைமாற்றியமைத்து தொண்ணூறுடன் முடிவடைந்த ஒரு தசாப்தத்தின் வரலாற்று நாயகனாக விளங்குகின்றார் பிரபாகரன் எனக்குறிப்பிட்டார். இதேவேளை விடுதலைப்புலிகளுடன் போரிட்டுத் தோற்ற இந்திய இராணுவ அதிகாரிகளும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பனவற்றையும் தலைவர் பிரபாகரனின் தலைமைத்துவத்தையும் புகழாமல் இல்லை.

"அரசியல் தீர்க்க தரிசனத்தை தலைகீழாக மாற்றி விடும் அபார சக்தி படைத்தவர்கள் விடுதலைப் புலிகள்" என அண்மையில் 'புரன்ட்லைன்' தெரிவித்த கருத்தானது மிகைப்படுத்தப்பட்டதென்று என யாரும் கூறுவார்களேயானால் அவர்கள் உலக அரசியல் நிகழ்வுகளை அறியாதவர்களாகவும் நடைமுறையதார்த்தத்தையும் விளங்கிக் கொள்ள முடியாதவர்கள் என்றுமே கூறவேண்டும்.

தற்பொழுது சிறிலங்கா தளபதி ஜெனரல் ஹமில்டன் புலிகள் பற்றிய கணிப்பீட்டை வெளியிட்டுள்ளார். ஜெனரல் ஹமில்டன்வனசிங்காவின் இக் கூற்று புலிகளுக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் முகஸ்துதி செய்ய வேண்டும் என்பதற்காக கூறப்பட்டதல்ல. அவ்வாறானதொரு தேவை ஹமில்டன்வனசிங்காவிற்கு இல்லை. தவிர்க்க முடியாத ஒரு நிலை உருவானதாலேயே ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா புலிகளையும் அதன் தலைமைத்துவத்தையும் அங்கீகரிக்க வேண்டிய நிலை உருவானது.

முன்னாள் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேயரெட்னாவுடன் சேர்ந்து விடுதலைப் புலிகளை 'மழலைகள்பட்டாளம்'எனக்கிண்டல்அடித்தவர் தான் ஹமில்டன் வனசிங்கா. தற்பொழுது அவர் புலிகள் இயக்கப் போராளிகளுக்கும், அதன் தலைமைத்துவத்திற்கும் நற்சான்று பகர்கின்றார் என்றால் கடந்த இருபது மாதத்தில் அவர் புலிகளிடம் கற்றுக் கொண்டது ஏராளம் என்பதை கூறித்தெரிந்து கொள்ளவேண்டும் என்பதல்ல.

கடந்த வருடம் விடுதலைப்புலிகளுக்கு எதிராக சிறிலங்கா இராணுவம் தாக்குதல் ஆரம்பித்தபோது ஓரிரு மாதங்களுக்குள் புலிகளை ஒழித்து விடலாம் என்றே சிறிலங்கா இராணுவத்தரப்பு கருதியது. ஆனால் அது கை கூடவில்லை. பின்னர் ராஜீவ்காந்தியின் மரணத்தைத் தொடர்ந்து தமிழ் நாட்டிலிருந்த பின் தளத்தை புலிகள் இழந்துவிட்டமையால், புலிகள் தோற்கடிக்கப்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை என அரசியல், இராணுவ வட்டாரங்கள் கருதின.

ஆனால், தலைவர் பிரபாகரன் நிலைமையைத் தலை கீழாக மாற்றி அமைத்துள்ளார். புலிகளின் தலைமைத்துவத்தால் வகுக்கப்பட்ட புதிய போர்யுக்தியும் விடுதலைப்புலிப் போராளிகளின் அர்ப்பணிப்புமிக்க உறுதியான செயற்பாடும் இராணுவத்தினரின் தந்திரோபாயங்கள், போர்த்திட்டங்கள் என்பவற்றைக் குழப்பியடித்துள்ளன. முன்னோக்கிக் கால் வைக்க இராணுவம் அஞ்சுகின்றது, வைத்த காலையும் அவசரப்பட்டு இழுத்துக் கொள்கின்றது.

இந்நிலையில் விடுதலைப்புலிகளின் திறமைகளையும், தலைவர் பிரபாகரனின் ஆற்றலையும் குறைத்துக்கூறவோ அன்றி வெளியிடாமல் எதிரியால் கூட இருக்க முடியாததுதான். ஆனால். ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் இக் கூற்று சிறிலங்கா இராணுவத்தினரின் ஏவல் வேலை செய்வோருக்கு ஜீரணிப்பது சிரமமாகத்தான் இருக்கும். ஆனால், என்ன செய்ய முடியும்? ஒன்று, சொன்னது அவர்களின் எஜமான் இரண்டு, சொன்னது தவிர்க்கமுடியாமல் ஏற்றுக் கொண்ட உண்மை.

# அவசரகாலச்சட்டம் மூலம் அரசு அதிகாரத்தை மீறுகிறது

### — தினேஷ் குணவர்த்தனா

(கொழும்பு)

மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை அரசு அவசரகால சட்டத்தின் மூலம் மீறும் போது வடக்கு கிழக்கு பிரச்சினையை எவ்வாறு தீர்க்க முடியும்? என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாகாணசபைகளுக்கு ஒரு புறத்தில் அதிகாரம் கொடுத்துவிட்டு மறுபுறத்தில் அந்த அதிகாரத்தை அரசே மீறும் போது யார் அரசை நம்ப முடியும்?.

வடக்கு - கிழக்கு பிரச்சினையைத் தீர்க்கவே பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. மங்கள முனசிங்க இக்குழுவிற்கு தலைமை தாங்குகிறார். மாகாணசபைகள் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு ஒரு தீர்வாகவே அமைக்கப்பட்டன. இவற்றை அமைத்த அரசே மாகாணசபைகளை புறக்கணிப்பது சரியா? இந்த நிலையில் மங்களமுனசிங்காவினால் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியுமா? என்றும் தினேஷ்குணவர்த்தனா தனதுரையில் வினா எழுப்பியுள்ளார்.

பாடசாலை அபிவிருத்தி சபைகள் அமைப்பது தொடர்பாக பாராளுமன்றத்தில் இடம் பெற்ற ஒத்தி வைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனநாயகத்தின் மீது அரசுக்கு நம்பிக்கை இருக்குமானால் அவசரகாலச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட பாடசாலை அபிவிருத்திச் சபை வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## சிறிமாவிற்கு 3 மாதகால விடுமுறை

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியும், எதிர்க் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவிற்கு மூன்று மாத கால விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் இவருக்கான லீவினை பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். முகமட் அறிவித்தார்.

சுதந்திரக் கட்சி பிரதம கொறடா றிச்சர்ட் பத்திரான லீவு வழங்கக் கோரும் பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

## சிங்களத்தில் பதில் கடிதம்

சிறிலங்கா அரசின் அரச கரும மொழியான தனிச் சிங்களச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தின் படி கடிதங்கள் அனுப்பிவைத்தவர்களுக்கு பதில் கடிதங்கள் தனிச் சிங்களத்தில் மட்டும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (24,

### மாணவனுக்கு தண்டனை

## சிலிப்பர்கட்டை அகற்றியதை பொலிசாருக்கு கூறவில்லை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளும் மற்றும் சிலரும் கொடிகாமத்தில் வைத்து சிலிப்பர் கட்டைகளை அகற்றுகிறார்கள் என்பதைத் தெரிந்து இருந்தும் பொலிசுக்கு அறிவிக்கத் தவறிய குற்றத்திற்காக பதினேழு வயது மாணவன் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ரூபா 7500 அபராதமும் பத்து வருடகாலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதித்துள்ளது.

கடந்த இருபத்தெட்டாம் திகதியன்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எவ்.என். டி. ஜயசூரிய முன்னிலையில் இவ் வழக்கு விசாரணைக்கு வந்தது. ஆஸ்பத்திரி வீதி வரணி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த கணபதிப் பிள்ளை ஆதவன் (1 ) என்னும் இந்த இளைஞர் 1.1.89 க்கும் 31.12.90 க்கும் இடைப்பட்ட காலத்தில் பயன்படுத்தப்படாத ரயில் பாதையில் சிலிப்பர் கட்டைகளை அகற்றுவதற்கு உதவினார் என்று குற்றம் சாட்டப் பட்டிருந்தது.

இவ் வழக்கில் எதிரிதரப்பில் ஆஜரான சட்டத்தரணி எம். எஸ். எம். அமீன் நீதிமன்றத்தில் தலைமை ஆசிரியரின் வேண்டுகோளுக்கு இணங்கவே இவர் சிலிப்பர் கட்டைகளை அகற்றியதாகவும், அறியாத வயதில் புரியாத தவறைப் புரிந்துள்ளார் என்றும் முதற் சந்தர்ப்பத்திலேயே குற்றத்தை ஏற்றுக்கொண்ட அவர் நற்பிரஜையாக வாழ சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

அரச சட்டத்தரணி பலிகாலதன எதிரி வேறு குற்றம் எதுவும் புரியவில்லை எனக் கூறியதை தொடர்ந்து நீதிபதி ரூபா 7500 அபராதமும், பத்து வருடம் ஒத்திவைக்கப் பட்ட சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

## வவு. இராணுவ நடவடிக்கை 400 பேர் அகதிகளாயினர்

[வவுனியா]

வவுனியாவில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த சுமார் 400 பேர் நெலுக்குளம் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர்.

கணேசபுரம், சாம்பல்தோட்டம், இராசேந்திரகுளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே இங்கு தங்கியுள்ளனர். இவர்களது குடியிருப்புக்கள் இராணுவ நடவடிக்கைகளின் போது சேதமாக்கப்பட்டிருப்பதால் இம்மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலை தொடர்ந்தும் நிலவுகிறது.

## வெளிநாட்டவர் வருகை; கட்டுப்பாடுகள் தேவை

### -- அஷ்ரப் வலியுறுத்து

(கொழும்பு)

டாலர்கள் ஸ்ரேலிங் பவுண்கள் ஆகியவற்றைப் பெருமளவில் வைத்திருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்துக்காக வெளிநாட்டவர் வருகையை கட்டுப்பாடின்றி அனுமதிக்கக்கூடாது என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் கடந்த புதனன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிதி (திருத்தச்) சட்டமூலத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் இனப் பிரச்சினை ஜே.வி.பி பிரச்சினை ஆகியவற்றின் பின்னால் வெளிநாட்டுக்கரங்கள் இருந்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது. சி.ஐ.ஏ மற்றும் யூததூண்டுதல் பற்றியும் பேசப்படுகிறது இவற்றில் வெளியார் தலையீடு ஆராயப்படுகிறது இந்நிலையில் கட்டுப்பாடுகளற்ற முறையில் வெளிநாட்டவரின் வருகையை அனுமதிக்கக் கூடாது எனவும் கேட்டுக் கொண்டார்.

## தொண்டர் ஆசிரியர் மட்டக்களப்பில் நியமனம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடைநிறுத்தி வைக்கப் பட்ட மட்டக்களப்பு மாவட்ட தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் இம்மாத இறுதியில் வழங்கப்படுமென மட்டக்களப்பு மாவட்ட பிரதம கல்விப் பணிப்பாளர் கே.திபாகரராஜா தெரிவித்துள்ளார்.

இந்த ஆசிரியர் நியமனங்கள் தொடர்பான மீளாய்வும் பகிரங்க விசாரணைகளும் இன்று 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை மட்டக்களப்பு கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என்றும்-

பகிரங்க விசாரணைகளின் போது, ஆசிரியர்கள், அதிபர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர், மாணவர், பழைய மாணவர் எனப் பல தரப்பினர்கள் சாட்சியமளிப்பர் என்றும்-

அறுபத்தியிரண்டு தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பாக பகிரங்க விசாரணைகளும் 334 ஆசிரியர்களது விண்ணப்பங்கள் குறித்து மீளாய்வும் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்

## யுத்தத்தைப் பற்றிப் பேசி காலம் கடத்துவதில் பயனில்லை

சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டே தீரவேண்டும். அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அவர்களின் தேவைகளை நிறைவேற்ற அரசு உடனடியாக முன்வரவேண்டும் என்று பாராளுமன்றத்தில் மாத்தறை மாவட்ட சுதந்திரக்கட்சி எம்.பி மகிந்த விஜயசேகரா கேட்டுக்கொண்டார்.

திக்குவல்லை கனிஷ்ட வித்தியாலயத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு பேசிய அவர்மேலும் கூறுகையில், எந்த ஓர் இனத்துக்கும் விசேட சலுகை இருக்கக்கூடாது. வடக்கு-கிழக்கு யுத்தத்தைப் பற்றிப் பேசிப்பேசி காலத்தைக் கடத்துவதில் எந்தவித அர்த்தமும் இல்லை. அரசு இதற்கு அவசரமாக ஒரு தீர்வைக் காண வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

# வங்கிகளின் வங்குரோத்து; விசாரணைக்குழு நியமிக்குக

(கொழும்பு)

மறுசீரமைப்பு வங்குரோத்து பற்றி இப்போது பிரச்சினைக்குள்ளாகியிருக்கும் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி குறித்து விசேட ஜனாதிபதி விசாரணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி கேட்டுள்ளது.

இது தொடர்பான நகல் பிரேரணை ஒன்றைச் சுதந்திரக்கட்சி பாரளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

வங்கியின் இரகசியத் தன்மை பேணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் வங்கிகளின் பணிகளில் அரசியல் தலையீடுஇருந்ததா? ஆணைக்குழு மறைக்கக் கூடாது என்ற நகல் பிரேரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வங்கியில் கடனாகப் பெற்ற 6 பில்லியன் ரூபா கடனைத் திருப்பித் தராதவர்கள் விபரம் பற்றியும், கடனைத் திருப்பிப் பெற கையாளப்படும் நடைமுறைகளை வெளியிட வேண்டும் என்றும்-

கடன் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடுவதுடன், கடனுக்குத் தகுந்த பிணை பெறப்பட்டதா? என்பதையும், வெளியிடுவதுடன் விசாரணை பகிரங்கமாக நடாத்தப்படவேண்டும் என்றும் நகல் பிரேரணையில் கோரப்பட்டுள்ளது.

விசாரணையில் குற்றவாளியாகக் காணப்படுபவர்களின் குடியுரிமை பறிக்கப்படவேண்டும் என்றும் நகல் பிரேரணை தெரிவிக்கிறது.

# அதிபர் சம்பளம் வழங்க உடனடி நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் இலங்கை அதிபர்சேவையில் III ஆம் தரத்தில் இருந்து II ஆம் தரத்திற்கும், II ஆம் தரத்திலிருந்து முதலாம் தரத்திற்கும் பதவி உயர்வு பெற்ற அதிபர்களுக்கு அவர்களுக்குரிய சம்பளத்தை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கல்விச் சேவைக்குழுச் செயலாளர் கல்விப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளார்.

1989.06-01 அன்று செயற்படும் வண்ணம் நியமிக்கப்பட்ட மேற்படி அதிபர்களுக்குச் சம்பளத்தைச் சீரமைப்பதும், சேவையை நிரந்தரமாக்குவதும் பிரதேச கல்விஅலுவலகங்களால் நடைமுறைப்படுத்தவில்லை என்று கல்விச் சேவைக் குழுவிற்குக் கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தரத்திலிருந்து தரத்திற்குப் பதவி உயர்வு செய்யப்படும் போது தற்பொழுது கல்விச் சேவைக் குழுவினால் வழங்கப்பட்ட பதவி உயர்வுக் கடிதத்திற்கு மேலாக மீண்டும் முறையான நியமனக் கடிதம் வழங்குவதற்குத் தேவை ஏற்படாதென்றும் கல்விச்சேவைக்குழுச் செயலாளரின் அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ், போதனாவைத்தியசாலை

# பணிப்பாளர் குழு கொழும்பு சென்றது

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர்குழு கடந்தஞாயிற்றுக்கிழமைதரை மார்க்கமாகக் கொழும்பு பயணமானது.

பணிப்பாளர் செல்வி ந.கனகரட்ணம் நிர்வாக உத்தியோகத்தர்பத்மநாதன் உட்படஏழு அதிகாரிகள் கொண்ட இக்குழு சுகாதார அமைச்சின் அழைப்பை ஏற்று கொழும்பு சென்றுள்ளது.

இவர்கள் இவ் விஜயத்தின் போது வைத்தியசாலை அபிவிருத்தி ஊழியர்களின் வெற்றிடம் நிரப்புவது, மருந்துக்கட்டுப்பாட்டை நீக்குவது, வைத்தியசாலைக்குத் தேவையான எக்ஸ்ரே கருவிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பான பேச்சு வார்த்தைகளில் ஈடுபடவுள்ளனர்என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

### உலகக்கிண்ண கிரிக்கட்

# மே. இந். தெ. ஆபி. அணிகள் போட்டிகளில் வெற்றி

உலக கிண்ண கிரிக்கட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கட்டுகளால் இந்திய அணியை தோற்கடித்தது.

இந்தியா 49.4 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 197 ஓட்டங்களை எடுத்தது பின்னர் இது மழை காரணமாக 46 ஓவர்களில் எடுத்த 191 ஓட்டங்கள் மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேற்கிந்திய தீவுகள் அணி 40.3 ஓவர்களில் 5 விக்கட்டுகளுக்கு 195 ஓட்டங்களைப் பெற்றது.

கான்பராவில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் தென்னாபிரிக்கா சிம்பாவேயை 7 விக்கட்டுகளால் தோற்கடித்தது.

# பிரேமாவிடம் ஜே. ஆர். கோரிக்கை

(கொழும்பு)

அஸ்கிரிய சர்வதேச மைதானத்தை ஹெலிகப்டர்கள் இறங்குவதற்கு பயன்படுத்த வேண்டாமென முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதி பிரேமதாசாவைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**நகை**

விதமாற்றமும் இல்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

மூலதனம் குறைந்த உரிமையாளர்களுக்கு ஏற்படும் மூலதன முடக்கத்தைக் கருத்தில் கொண்டே இச்சலுகை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச, க)

**அகதி**

இவர்களை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் குடிசைகள் அமைத்துக் கடந்த மாதமே அங்கு தங்கவைத்தது.

இத்தீவிபத்தில் சிக்கி க.சின்னம்மா [வயது 70] என்பவர் தீயில் கருகி மரணமானார். தங்கரட்ணம் [வயது 40], விஜயசிறி [வயது 24], இராசமணி [வயது 53] ஆகிய மூவரும் எரிகாயங்களுக்குள்ளாகினர். (ச, க)

**சைக்கிள்**

இத் திட்டத்தை தாம் நடைமுறைப்படுத்தவுள்ளதாக தெரிவித்த அவர் புதிதாக பொதுமக்களிடமிருந்து சைக்கிள்களை வாங்குவோரும் அச்சைக்கிள் பற்றிய விபரங்களை அருகிலுள்ள காவல் துறை பணிமனைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் அறிவித்துள்ளார். (ச, க)

**தீவகத்திற்கு**

சங்கத்தினர் ஊடாக தீவகத்துக்கு அனுப்பி வைக்கப்பட இருக்கிறது.

காரைநகருக்கான கடிதத்தில் சென்றடையவேண்டிய முகவரியின் கீழ் ''அஞ்சல் பெட்டி எண் 6, அனுராதபுரம் என்றும், ஊர்காவற்துறைக்கான கடிதத்தில் அஞ்சல் பெட்டி எண் 7'', அனுராதபுரம் எனவும் எழுதப்பட வேண்டும். ஏனைய இடங்களுக்கான கடிதங்களிற்கு வழமையான முகவரிகள் இடப்பட வேண்டும்.

கடிதங்கள் அனைத்தும் திறந்த உறைகளில் வைக்கப்பட்டே அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறான கடிதப் போக்கு வரத்துக்கள் மாதத்தில் இருதடவைகள் நடாத்தப்பட உள்ளது.

# வவுனியா ரயில் சேவை நேர மாற்றம்

(கொழும்பு)

வவுனியா - கொழும்பு ரயில் சேவையில் நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

வவுனியா இரவு தபால் ரயில் இரவு 11.00 மணிக்கு கொழும்பை விட்டு புறப்பட்டு மறுநாள் அதிகாலை 5.30 மணிக்கு வவுனியாவை சென்றடையும் என்றும்,

வவுனியாவில் இருந்து இரவு 10.00மணிக்கு புறப்பட்டு மறுநாள் அதிகாலை 4.20 க்கு கொழும்புக் கோட்டையை வந்தடையும் என்றும்,

யாழ். தேவி ரயில் அதிகாலை 5.45 ற்கு புறப்பட்டு காலை 11.15 ற்கு வவுனியா வந்தடையுமென்றும் நேற்று முன்தினத்திலிருந்து இந்த மாற்றம் அமுல் செய்யப்படுகின்றது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தடுப்பு மருந்து இல்லாமை; வயோதிபர் பரிதாப மரணம்

விசர்நாய்க்கடிக்கு இலக்கான வயோதிபர் ஒருவர் தடுப்பு மருந்து இல்லாமையால் பரிதாபகரமாக மரணத்தைத் தழுவிக் கொண்ட சம்பவம்ஒன்றுபருத்தித்துறைப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது: கடற்கரை வீதியைச் சேர்ந்த பொன்னையா இராசதுரை என்பவருக்கு விசர்நாய் ஒன்று சில வாரங்களுக்கு முன் கடித்தது. அவர் அதற்கான தடுப்பூசி ஏற்ற முற்பட்ட போதும் அம்மருந்து இல்லாமையால் பல நாட்களின் பின் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு போதிய சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் கடந்த சனிக்கிழமை அவர் மரணமானார். (ச, க)

# ஷெல்லை கல்லால் குற்றி கையை இழந்த சிறுவன்

ஷெல்லை கல்லால் குற்றிய போது அது வெடித்ததில் ஒருவர் கையை இழந்தார் மற்றவர் படுகாயமடைந்த சம்பவம் ஒன்று நேற்று நண்பகல் இளவாலைப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது; நேற்றுக் காலை வயல் வெளியில் கண்டெடுத்த ஷெல் ஒன்றை வீட்டிற்கு எடுத்து வந்த இளைஞர்கள் அதனை கல் ஒன்றால் குற்றிய போது அது வெடித்ததாகவும் இதனால் ச. சுதன் (வயது 15) என்பவர் தனது வலதுகையை மணிக்கட்டுடன் இழந்தார். ந. சிவசுதன் (வயது 22) என்பவர் படுகாயமடைந்தார். இவர்கள் இருவரும்சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச, க)

# செஞ்சிலுவை மாணவர் எதிர்ப்பு ஊர்வலம்

இலங்கை செஞ் சிலுவைச் சங்க யாழ் கிளையைச் சேர்ந்த ஒரு ஊழியரை இடமாற்ற வேண்டாமெனக் கோரி அங்கு கல்விபயிலும் மாணவ மாணவிகள் நேற்று ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது. யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த பெண் ஊழியர் ஒருவர் சாவகச்சேரி கல்விப் பயிற்சி நிலையத்துக்கு மாற்றப்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த மாணவ மாணவிகள் ஊர்வலத்தை நடத்தினர். கொழும்புத்துறை செஞ்சிலுவைச் சங்க கிளையில் இருந்து ஆரம்பித்த இந்த ஊர்வலம் யாழ். சுண்டிக்குழி செஞ்சிலுவைச்சங்கதலைமைக் காரியாலயத்தை வந்தடைந்தது.

செஞ்சிலுவைச் சங்க செயலாளர் சிவானந்தராசாவிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (75)

**இவ்வருட**

குழுக்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என்றும்,

தொடர்ந்து தமிழீழத்தின் பல பாகங்களிலும் பத்துநாட்கள் இடம்பெறவிருக்கும் இவ்விழாவில் பட்டிமன்றங்கள், கவியரங்குகள், நடன நிகழ்வுகள், நாட்டிய நாடகங்கள், வில்லுப்பாட்டு, தமிழர்களின் பாரம்பரிய கூத்துவடிவங்கள், நாடகங்கள் என பல சிறப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்றும்,

முத்தமிழ்விழாவில்பங்கேற்க விரும்பும் கலைஞர்கள் தங்கள் ஆக்கங்களின் எழுத்துப் பிரதிகளை வரும் 30 ஆம் திகதிக்கு முன்பாக 'முத்தமிழ் விழாப் பொறுப்பாளர்' தலைமைச் செயலகம், விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம், கோண்டாவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கலை, பண்பாட்டுக் கழகம் கேட்டுள்ளது.

# அறிவித்தல்

## சனசமூக நிலையங்களின் நிர்வாகக் குழுக் கலந்துரையாடல்

எதிர்வரும் 21ம், 22ம் திகதிகளில் (மார்ச்) சனசமூக நிலையங்களின் நிர்வாகக்குழுக்களின் கலந்துரையாடல்கள் எனது தலைமையில் அந்தந்த உப அலுவலகங்களிலும் நகர சபைக்காரியாலயங்களிலும் இடம்பெறும் இதில் பங்குபற்றாத சனசமூக நிலையங்களின் பதிவு இரத்துச் செய்யப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். கலந்துரையாடல் இடம்பெறும் நேரத்தைச் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களிலிருந்து தவறாது அறிந்து கொள்ளவும்.

ஏற்கனவே கேட்டதற்கிணங்க சகல சனசமூக நிலையங்களும் முதலுதவிப் பயிற்சிப் பட்டியலை 16-03-92 திங்கட் கிழமைக்கு முன்னர் எனது காரியாலயத்தில் தவறாது கையளிக்கவும்.

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்.
1992-3-10 (சி 4037)

# மரண அறிவித்தல்

## சின்னர் மயிலு

நாவற்காடு வரணி சின்னர் மயிலு அவர்கள் 10-3-92 அன்று காலமாகிவிட்டார். அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக்கணவரும், சின்னர் இளையதம்பியின் அன்புச் சகோதரரும், சின்னத்துரை [ராஜேஸ் ஸ்ரோர்ஸ், கொடிகாமம்], சின்னராசா [கோகிலா கூல்பார், கொடிகாமம்] இராமச்சந்திரன் [சவுதி அரேபியா], செல்வராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், ராசேஸ்வரி, சூரியகலா, கிருஷ்ணராணி ஆகியோரின் அன்பு மாமனும் சசிகலா, தீபகரன், நளாயினி, துளசிகரன், கோகிலா, சுதாகரன், அர்ச்சனா, சுகன்யா, வினோதன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் தகனக் கிரியைகள் 11-3-92 புதன்கிழமை [இன்று] பி. ப. 3 மணியளவில் குடமியன் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்
சின்னராசா,
சின்னத்துரை

கோகிலா கூல்பார்,
பஸ் நிலையம்,
கொடிகாமம். [2286]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.